முருகப்பெருமான் துணை

# மகான் புகழ்சோழ நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.11.2023**, திங்கட்கிழமை

1. மனுகுலம் ஞானவழி தழைத்து
மறுமை வெல்லும் சூட்சுமமறிய
ஞான குருவாய் வந்த அரங்கா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலைதிங்கள்
குறைவிலா இருபான் திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20 ம் நாள், 06.11.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன்கேட்க புகழ்சோழ நாயனார் யானும்
3. யானும் மனுகுலம் பண்புற உரைப்பேன்
உயர்வான தரும தயவு நெறியை
ஞானமாக அருளும் அரங்கன்
நன்னெறிக்கு மிஞ்சிய மார்க்கம்
4. மார்க்கம் உலகில் வேறெங்குமில்லலை
மாதவராஜன் வழிமுறை ஏற்று
பார்த்துரைக்க உலகமக்கள் வர
பண்புநலம் கூடி உலகில்
5. உலகில் தயவான சமூக மாற்றம்
உண்மை தருமம் நிறைந்த
உலகாக மாற்றமும் காணும்
உலகை காக்க வந்த ஞானி
6. ஞானி அரங்கன் திருவடி
ஞானம் தரும் ஞானத்திருவடி
ஞானிகள் பூசை வழிமுறையுடன்
நல்மார்க்கம் சைவநெறி ஏற்று

7. ஏற்றுமே அன்னதான சேவை
எங்கும் வறுமை அகல
பற்றிய பசிபிணி விரண்டோட
பழுதில்லா செய்து வருக
8. வருகவே உலகை பற்றிய
வதையான கலித் துன்பங்கள்
வருங்காலம் தொடரா விலகி
வையகம் வளமும் பலமும் காணும்
9. காணவே மனிதர்களிடையே
கருணை பெருக்கம் கண்டிட
ஞானபண்டிதன் வெளிப்பட்டு
ஞாலமதில் மனுகுலம்யாவும்
10. யாவுமே ஞானவான்களாகி
உரைத்திடுவேன் நன்மை தருகின்ற
அவனியில் ஞான ஆட்சிமலரும்
அரங்கமகான் நோக்கம் நிறைவேறும்
11. நிறைவேற ஞானத்தலைமை
நீதி குன்றாத ஆட்சிமுறை
குறைவிலா வளர்ச்சி மேன்மை
குவலயம் கண்டு பாதுகாப்பை பெறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—